




We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 2019

*We Are Here..!! To Guide You..!!*






# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 22.01.2019

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்
- பொருளாதார நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்











## தமிழக நிகழ்வுகள்

- **சென்னை, ஓசூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி** ஆகிய இடங்களில் உள்ள இராணுவ தளவாட தொழிற்சாலைகளை இணைக்கும் வகையில் **"இராணுவ தொழில் வழித்தடம்"** திருச்சியிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது.
  - **கோயம்புத்தூரில்** இராணுவ தளவாட கண்டுபிடிப்புகளுக்கான கேந்திரமும் தொடங்கப்பட உள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- **மத்திய அமைச்சரவை,** ஆஸ்திரேலியா மற்றும் இந்தியாவின் சுரங்கப் பாதுகாப்பை மேம்படுத்திட **குயின்ஸ்லாந்து**(ஆஸ்திரேலியா) **மகாணத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில்** கையெழுத்திடுவதற்கு ஒப்புதலை அளித்துள்ளது.
  - இதன் மூலம் பாதுகாப்பு மேலாண்மையை ஏற்படுத்தவும், சிறந்த பாதுகாப்பு முறைகளில் பாதுகாப்பு பயிற்சி அளிக்கவும் முடியும்.

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின்படி, **இந்தியாவானது 2019 ஆம் ஆண்டில்,** பாலைவனமாதலைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தத்தின் (United Nations – Convention to Combat Desertification – UNCCD) **உறுப்பினர்கள் மாநாட்டின்** (Conference of Parties – CoP) **14-வது பதிப்பை** நடத்த உள்ளது.

## உலக நிகழ்வுகள்

- **G77** குழுவின் தலைமைப் பதவியை **எகிப்திய அரபுக் குடியரசிடமிருந்து பாலஸ்தீனம் கைப்பற்றி** உள்ளது.
  - 2019ல் G77 குழுவின் தலைமைப் பதவியில் பாலஸ்தீனத்தை தேர்ந்தெடுப்பது என அக்குழு உறுப்பினர்களால் செப்டம்பர் 2018ஆம் ஆண்டு முடிவு செய்யப்பட்டது.
  - **G77 – 1964, ஜுன் 15ல்** உருவாக்கப்பட்டது. தற்போது **G77 குழுவில் 134 நாடுகள் உள்ளன.**



We Shine Academy™

## விளையாட்டு நிகழ்வுகள்

- **ஜனவரி 20, 2019ல்** நடைபெற்ற **16-வது டாடா மும்பை மாரத்தான் போட்டிக்கான நிகழ்ச்சித் தூதுவராக** ஆறுமுறை உலக பெண்கள் குத்துச்சண்டைப் போட்டியின் சாம்பியனும் ஒலிம்பிக் பதக்கம் வென்றவருமான **M.C மேரிகோம் நியமிக்கப்பட்டார்.**
    - இப்போட்டி புரோகேம் சர்வதேச நிறுவனத்தால் நடத்தப்பட்டுள்ளது.

## நியமனங்கள்

- **பாகிஸ்தானின் 26-வது தலைமை நீதிபதியாக** பதவியேற்ற **ஆசிப் சையீத் கோஷாவிற்கு,** பாகிஸ்தான் குடியரசுத் தலைவர் ஆரிப் அல்வி பதவிப் பிரமாணம் செய்து வைத்துள்ளார்.
    - இவர், தனது தீர்ப்புகளில் இலக்கிய படைப்புகளைச் சுட்டிக் காட்டும் பழக்கத்தால் **கவிதை நீதிபதி** என அறியப்படுகிறார்.

## பொருளாதார நிகழ்வுகள்

- **மத்திய நிதியமைச்சகம்,** ஆண்டு நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும் முறை பற்றி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த சுட்டுரையில் **"உங்கள் பட்ஜெட்டை அறியவும்"** (Know Your Budget) என்ற தொடரை தொடங்கியுள்ளது.
    - இதில் பட்ஜெட்டில் உபயோகப்படுத்தப்படும் பல்வேறு வார்த்தைகளின் விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

## முக்கிய தினங்கள்

- **தேசிய பெண் குழந்தைகள் தினம் - ஜனவரி (24)** (National Girl Child day)
    - பெண் குழந்தைகளின் கல்வி, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான முக்கியத்துவத்தை மக்களிடையே பரப்புவதற்கு ஒவ்வொரு ஆண்டும் தேசிய பெண் குழந்தைகள் தினம்

ஜனவரி 24ல் கொண்டாடப்படுகிறது.

- இந்தாண்டில், **"சிறந்த எதிர்காலத்திற்கு பெண்களுக்கு அதிகாரமளித்தல்"** என்ற குறிக்கோளுடன் பெண்கள் மற்றும் குழந்தைகள் அமைச்சகம் இத்தினத்தை கடைபிடிக்க உள்ளது.

We Shine Academy ™